உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ குறவைசுவாமிகள் திரட்டியருளிய

# சீடாசாரம்.

## வஸ்துசொரூபங்காரிய மவஸ்திபாலலட்சணம்

## அட்டப்பிரமாணத்தின் திஷ்டாந்த

## தாஷ்டாந்த உரை.

இவை

சரவணக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு ஒருவாறாராய்ந்து

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

வியவருஷம் சித்திரைமீ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சீடாசாரம்.

## காப்பு.

ஆனைமுகனாறுமுக னம்பிகைபொனம்பலவன்
ஞானகுருவாணியை யுண்ணுடு.

## நூல்.

### முத்திக்கேது.

தந்தைதாயுமெய்த்தகைவுடையுறவுஞ்சாலுங் கல்வியுந்தகுமுயிர்த்துணையுஞ், சிந்தையாருநற்சீலமும்வலியுந் திருவுருமின்பமுஞ் சிதைவிலாவறிவு, முந்தையாமுளத்துவகையுமுயிருமூலமுத்தியுமொழிவருஞ்சமைவு, மெந்தையாகிவந்தேழையேனையுமாளிறைவனார்கழலாகுமென்றனக்கே. (௧)

### வேறு.

தந்தைதாயாவானுஞ் சார்கதியிங்காவானு
மந்தமிலாவின்பநமக்காவானு-மெந்தமுயிர்
தானாகுவானுஞ் சரணாகுவானுமருட்
கோனாகுவானுங் குரு. (௨)

### வேறு.

முத்திசித்திக்குமேது மொழிவர்கள்சிலர்வெவ்வேறே, சித்தமற்றுலாமென்றுந் தீவினைசிதைந்

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சீடாசாரம்.

## காப்பு.

ஆனைமுகனாறுமுக னம்பிகைபொனம்பலவன்
ஞானகுருவாணியை யுண்ணு.

## நூல்.

### முத்திக்கேது.

தந்தைதாயுமெய்த்தகைவுடையுறவுஞ்சாலுங் கல்வியுந்தகுமுயிர்த்துணையுஞ், சிந்தையாருநற்சீலமும்வலியுந் திருவுருமின்பமுஞ் சிதைவிலாவறிவு, முந்தையாமுளத்துவகையுமுயிருமூலமுத்தியு மொழிவருஞ்சமைவு, மெந்தையாகிவந்தேழையேனையுமாளிறைவனார்கழலாகுமென்றனக்கே. (க)

### வேறு.

தந்தைதாயாவானுஞ் சார்கதியிங்காவானு
மந்தமிலாவின்பநமக்காவானு-மெந்தமுயிர்
தானாகுவானுஞ் சரணாகுவானுமருட்
கோனாகுவானுங் குரு. (௨)

### வேறு.

முத்திசித்திக்குமேது மொழிவர்கள்சிலர்வெ வ்வேறே, சித்தமற்றுலாமென்றுந் தீவினைசிதைந்

தாலென்று, மொத்தநல்யோகாலென்று முரியநா னத்தாலென்று, மித்திறமனைத்தாலாகா லிவைநிரு வருளாலாமே. ( ௬ )

எஞ்ஞானமந்திரங்கள் யோகங்களுபாயங்களெல் லா, மெய்ஞ்ஞானவீட்டைக்காணும் வழியாகமாட்டா, தெஞ்ஞானக்கடைக்கண்வைத்த சிகன்சித்தமத்தி,லஞ்ஞானம்பறிக்கபோதகமாறு தவீடதுவந்தோன்றும். ( ௭ )

ஆர்த்ததுபிறவியென்றுமஞ்ஞானபாசமதனை க், கூர்த்தமெய்ஞ்ஞானவாளைக் கொண்டிதனறுக்க வேண்டு, மேத்திமெய்ஞ்ஞானவாளை யேயவனரு ட்கண்ணாலே, பார்த்தபின்னில்லாப்பெருகம்பருதி முன்னிருள்போலன்றே. ( ௮ )

விடத்தினான்மூர்ச்சித்தானை விடம்வல்லார்பா ர்க்கத்திரு,மடர்த்தல்லாரெல்லாம்பார்த்து மதுதீரா வாறுபோல, விடத்தினையுடையஞான விறைவனும் பார்க்கினல்லாற்; சடத்துவமாயையார்செய் சடக் குடைப்பிறப்பறுதே. ( ௯ )

வேறு.

சுருதியுமிருதியுஞ் சொன்னவாயுகின், றிரு மையுமதித்தமென் றேதும்விட்டுநம், குருவினை வ ழிபடிற்கோதிலாவவ, னருளிடுமுழிவற நின்றமைப் பொருள். ( ௧ )

---

* அமலவீடென்று பாடமோதுவாருமுளர்.

வேறு.

எண்ணிலாக்கல்வியாறு மிலங்கிய கேள்வியா
ளுங், இன்னிதாமதியிற்றுங்கெளியவாராதிருந
ன்னியஞானிதானே நயந்தருள்செய்யிற்றானக்,
கண்ணிறும்காணலாகுங் கரத்திலாமலகம்போல.( )

பருவிடங்கடியுண்டாரே பாவிப்பான் கருட
ன்றன்னைப், பெருகியபித்தன்றானே பிறிந்துபாமரு
ந்துகொள்வா, னிருமையுமறியாமூடர்க் கிடமு
மேவிறையிற்கூடக், குருபரன்கூட்டிற்கூடுங்க
டாதேற்கூடாதென்றான். (௯)

கட்டுண்டகன்வன்றே கட்டினைவிட்டுக்கொ
ள்வான், விட்டவேதனையைத்தீர்த்து விதிப்பவர்
வேறேவேண்டும், மட்டமாசித்தியோகா லறிவிறல
றியலாமோ, தட்டறப்பாசந்தீர்க்கத் தற்பரங்குரு
வேவேண்டும். (௧௦)

வேறு.

உருவன்றியோனின் அருவம்புணர்க்குங் கருவ
ன்றியோனின்றுதான்கருவாகு, மருவன்றியோன்ற
மாயப்பிரானைக், குருவன்றியாவர்க்குங்கூடவொண்
ணாதே, (௧௧)

வேறு.

முத்திசாதனம்.

தேசிகன்பதங்கட்சேவையின்வலியுந் திருப்பதத்
துணவிலாவன்பு, மாசினைமுத்தியதில்லிருப்பதுவு

மமலவாரணத்தினில்விருப்பு, நாசமாமிந்தவுடலி னில்வெறுப்புநசையறவிடயத்திலுவர்ப்பு, மீசனெ ப்பொருளு மென்னுநற்றுணிவு மிவையெழின்முத் திசாதனமே. (கஉ)

திகழுநற்குரவன்றிருவுளம்பார்த்துச் செய்யு மேவற்சிறப்பதுவு, மகிழுநற்குரவன் மருவுநம்பதி யே மன்னிநீங்காதவாதனையும், புகழுநற் றமரும் பொன்முதற்பொருளும் பொருந்துநோயெனமதித் திடலுந், தகைவுடைச்சமைவுஞ்சாந்தியுமுத்திசா தனமென்பர்தக்கோரே. (கங)

முடிகவித்துலகாள்திருவிகழ்ந்திறைவன்மொ ய்கழல்சூடுநற்றிருவும், படிதனக்கேவல்செய்பதமி கழ்ந்து பரமனுக்கேவல்செய்பதமு, மடையுநற்சு வைகளனைத்தையு மிகழ்ந்திங்கமலனற்சேடமாருத லு, மிடையறத்திகழுமுத்திசாதனமென்றிசைத்தி டுமெலையிலாரணமே. (கச)

துரிசினற்பாரம் பரியமாமுறையிற் றுகளறவ ழிவிலாத்துணிவும், பரிவுறக்குரவன்பாதமேநோக் கிப்பழுதறப்புகழுபண்பதுவு, மரியநற்குரவனருள றம்பொருளோடின்பம் வீடென்னுமாண்மையது ந், தெரிவுறத்திகழுமுத்திசாதனமாய்ச் செப்புவர் தெய்வஞானிகளே. (கரு)

வேறு.

நேசநெஞ்சிஞற்றனக்கதுநினைவலவாயினுநெ யன்றே, தேசிகன்றிருவுள்ளமே செய்குவான்

செனித்திடுங்குலத்துக்கு, மாசதாகினுமாச்சிரமத்
திலெவழுவினுமுலகெல்லா, மேசிவீடினுமறம்புக
ழ்தனம் பிறவிழுப்பினுமிடரோனும். (கசா)

என்றனக்கிதுவாய்த்தவாறறிகிலே னெம்பிரா
ன்கழற்கேவ, றன்றனக்குநாணுரிதுதகுவதோ தமி
யனேற்கென்றென்று, சென்றுறப்பெருமார்வமும
ச்சமுஞ்செறிதரவடிமைக்க, ணின்றியற்றிபதேவ
லினியல்பெண நிகழ்மறைசொலுமைந்தா. (கஎ)

நிறம்பெறநீராடாமுன் னீராடானின்றிடவி
ருத்தல்தான்கிடத்த, லுறங்குமுன்னுறங்கலுண்ணு
முன்னுண்ட லுரையெனலுரையாமலுரைத்த, லற
ம்பழியெவற்குங்கூறுத லருளாததுசெய்தலருளிய
பணியை, மறந்தனனென்றல்குருவலாற்றெய்வம
தித்தல்செய்பவன்மகனல்லன். (கஅ)

வேறு.

அருளறமங்கறைந்திடுத லறமலாதுரைத்தல
றைபொழுதிலிடையுரைத்த லகங்கரித்தங்குரைத்
தல்,பொருளறிவுதானுரைத்தல்பொருளல்லாதுரை
த்தல் புன்கோட்டிகொண்டுரைத்தல்பொடிவனவ
ங்குரைத்த,லிருளுறுமச்செவிசொல்லலேவலிசைத்
திடுதலிடமறியாதிறைபருளிச்செயவுரைத்தல் வின
வல், தெருளுறுநற்குருகீர்த்தியல்லது பாடிடுதல்
தேசிகன்றன்சன்னதியிற் றீரவிடுமிவையே. (கக)

வேறு.

வெஞ்சொலுங்கடுஞ்சொலும் விளைக்குசொல்
லதும், வஞ்சமும்பழுதுடன்மாறுகூறலும், பகுதி
டுமுலகியல்பயனில்வாசகந், தஞ்சநாயகன்றன் மு
ன்றவிரவேண்டுமால். (௨௰)

வேறு.

ஆதனஞ்சயனம் வாகனமிதியடி யத்திரங்கு
டையொடாபரண, மீதுவண்டயிலங்குளியொடுபூ
ச்சந்தன முதன்மேவியங்கிடுத, லொருபல்லுருஞ்
சல்லொண்பதம் விளக்குலைத்தவெற்றிலை யிவையி
வைதா, ஞதிநன்குரவனரியசன்னதியிலடியவரற
விடுந்தொழிலே. (௨௧)

இறைவன்முன் பசிங்கிதமாகவந் திருதவிட்ட
வேடத்திறேடணைதல், கறையுறுஞ்சாயையிறைவ
ன்மேற்படுதல் கடவுளினிழறன்மேற்படுத, லுறை
தருதலத்தின்மே லிருந்திடுதலுளமுகமு ருளமாயி
ருத்த, லறைதருமமலனரியசன்னதியி லடியவரற
விடுந்தொழிலே. (௨௨)

வேறு.

போற்றுகைதவிர்தருதன் பொருளினைப்புசிக்
தலீதல், தூற்றுதரோடந்தன்னைச் சொன்னவை
மறுத்தல்பொய்கள், சாற்றுதல்குலமுங்கல்வி தனை
த்தபிமானம்பண்ணன், மாற்றுதல்கொடுத்தறன்னை
மற்றிவைகுருவோடாகா. (௨௩)

## வேறு.

நீரிடத்திலுதிசியிருளிடத்திலு நெறிகணிற்பய
முறுமிடத்துந், தீராருட்குரவன்முன்பு சேவிப்பா
ன் றிகழ்ந்தமற்றுள நெறியவற்றிற், பேராருட்குரவ
ன்பின்பு சேவிப்பான் பிறிதொருதிக்கையற்றிறைவ,
னார்திருக்கழலிற்சாயை போன்முன்பின்னாய்விடா
ரன்பிலுத்தமரே. (௨௪)

## வேறு.

தன்னுளத்தெழுநிங்குகறையகன், முன்னுளா
த்திணிமென்முளையாவதை, சொன்னவப்பரிசேசட
வேண்டலா, லன்னவப்பதிவிட்டகல்வானலன். ( )

## வேறு.

தனமாக்காயமுயிர்மூன்றுந் தலைவற்கீந்தங்கி
வைகெடிலு,மனவாக்காயகன்மத்தால்வணக்கங்கெ
டாதமனத்தாராய், வினைவாக்காயமஷ்டாங்கபஞ்சா
ஙகநேர்சிட்டாங்க, மனநால்வணக்கஞ்சிராங்கமு
டனிறையாம்பிறவியறுவோர்க்கே. (௨௬)

சென்றபோதிறைவன்றிருவடித்தலத்தேதிறங்
தயஞ்சாங்கவட்டாங்க, மொன்றவேவணங்கியொ
ப்பிலானருளையுளமதுநிறையவேபருகிப், பின்னர
ப்பரிசேவிடை கொளும்பொழுதும்வணங்குக பெரி
யவன்முகப்பே, நின்றுநெக்குருகித்தன்றன்வாயார
த்துதிப்பதுவிதியன்பருக்கே. (௨௭)

குரவனூர்திர்த்துமொழிவனவெல்லாங்குருதா மாகவோதிடுகத், தெரியுமாறரியஞானகோசத்தை த்தெரிந்திடினெடுத்தவிழ்த்திறைமு, னரியவாதன த்தில்வைத்திறையருட்டாள் வணங்கியங்கதன்பய ன்கேட்டாங், குரியகோசத்தைக்கட்டிநாயகன்று ளொப்பறவணங்குதலொழுக்கே. (உஅ)

எப்படிக்கீழாமவர்களேயெனினுமிறையுளத்த டைத்தவர்தம்மை, யப்பரம்பரமனென்றுளத்து ணர்கவயன்முதன்மூவரோயெனினு, மெய்ப்படவி றைவன்றிருவுளமிலதேன் மீண்டுபாராதுகைவிடு க, செப்பிடவிறைவன்றிருவருணிறைந்தசீடராசார நன்கிதுவே. (உகூ)

இப்பரிசிறைவன்றிருவுளம்பிழையாதிலங்கிய வேவலின்வலியா, லெப்பரிசுள்ளசித்திகள்வலிகளி சைந்திடாநிற்குமங்கவர்பா, லப்பரிசெல்லாச்சித்தி யும்வந்தாலகத்தையும்வியப்புமேவாமே, தப்பறவெ னையாடம்பிரானேவற்றன்மையென்றருளினைப்பணி வாம். (௩0)

பெருந்தவமில்லான்றன்னைப்பேணியமடந்தை யுள்ளத், திருந்தவைமுடிந்ததென்றுலிகபரந்தெரிந் தஞானப்,பெருந்தவக்குருவைத்தெய்வமென்றுமெ ய்பேணவல்லார்க், கரும்பொருளியாதுமில்லையிரு மையுமகலிடத்தே. (௩௧)

சாற்றியபரிசிற்றவறுதலைவன்மறுத்தலாம்பி
ழையதுசாற்றி, ஞாற்றவங்கதனைத்தீர்த்திடற்குபா
யமாய்ந்திடத்தொன்றிஞவில்லைச், சேற்றினைச்சேற்
றாற்கழுவலாயிடுமோ தெளிந்தநீர் கொண்டலால
துபோ, லாற்றியவிறைவனருடருநீராலப்பிழைச்
சேறுநீக்கிடுவான். (௩௨)

வேற்றுளகுற்றமியாவையுந்தீர்க்கும் விமல
மாமிறையருளென்று, லாற்றவங்குற்றபிழையைநீ
க்குவதுமவனருளன்றிவேறுண்டோ, போற்றியங்
கவன்றன்பொன்னடிபொருந்திப் புனிதபாதோதக
மாடி, யாற்றவங்கமலனருளினைமுழுக்கிலக்கணந்தி
ருமப்பிழையே. (௩௩)

அறைந்தவப்பரிசப்பிழையினைநீக்காதவனெரி
நிரயம்வீழ்ந்தழியும், பிறந்திடிற்பிரமவரக்கனும்பெ
ரும்பாம்பாமெனப்பெருமறைபேசுஞ், சிறந்தனபி
ழைதீர்வளவுமங்கவன்றன் றெரிசனம்பரிசனந்தகு
மோ, மறந்துமற்றனுசார்மாதவத்தடியாரனுகில்வ
ன்பாதகமன்றே. (௩௪)

தேசிகன்றிருவுள்ளமுண்டாக வச்சிவந்திகழ்ந்
திடுகின்று, னீசனிங்கருள்செய்யவந்திருக்கிறவிட
மிவன்றிருமேனி, மாசதொன்றிவ னளவிலேசெ
யிலெரிவாய்நரகினிற்பூத, நாசமெவ்வளவவ்வளவு
ஞ்செலநண்ணுநன்னெறிநண்ணான். (௩௫)

வேறு.

குரவனேகுறியேதுமிலாச்சிவ, னாரியசத்தியே
யொப்பிலாவம்பிகை, கருதுமைந்தரோகந்தர்வினாய
கர், பெருகுசுற்றமும்பேணுமப்பத்தரோ. (௩௫)

வேறு.

சற்குருப்பரசிவன்றானாயினும்வாசிசாற்றிம், ச
ற்குருசிவன்கோபித்தாற் சமிப்பிக்குஞ்சிவனாலென்
றுஞ், சற்குருகோபந்தன்னைச்சமிப்பிக்கவொண்ணா
தத்தாற், சற்குருநாதன்பாதந்தப்பிடான்முத்தன
ன்றே. (௩௭)

வேறு.

அருவெனுமமலன்றானருளிலனெனினுஞ்சார்
குருபரனருளுண்டேயெனிலொருகுறையுண்டோ
திருவடிதரவந்தார் திருவுளமிலனென்றா
லொருவருமிலர்கண்டீ ருறுதுயர்களைகின்றார். ( )

வேறு.

குருபரனேபரமசிவன்பரேசன்றானே குருவா
னாமாகினுமேயொருகாலத்தி, னிருமலமாம்பரமசி
வன்முனிவுற்றாலு நிகரில்தயாநிதியானகுரவன்கா
ப்ப, னருள்வடிவேதிருவுருவாயெழுந்துநின்ற வா
சிரியனென்றேனுமுனிவுற்றானேற், றிரிவிதமாமு
லகத்துமம்மானனைத் தியக்கமெலாந்தீர்த்தெவரு
ங்காப்பதில்லை. (௩௯)

தந்தைமுதற்பெந்துவெலாமனந்ததேகந் தரு வதலாலனுதிபவபந்தந்தீர்க்கார், சிந்தையினுலாய்ந் திடிலப்பெந்துவெல்லாஞ் சிறுமைதருஞ்சத்துரு வேயாகாநிற்ப, ரந்தமிலாவருள்வடிவாங்குருவோ வென்று லகண்டபரஞானத்தை யருளானல்கித், தொந்தமதாமனுதிபவபந்தமெல்லாந் துப்பறவேங ன்றாகத்துடைத்துக்காப்பன். (௪0)

வேறு.

இந்தவிடும்பையுடம்புறுமேது, தந்தையெனப்புகழ்கின்றிலர்தக்கோ, ரந்தமிலாதவகண்டமுநமமுட், டந்தவர்தந்தையெனச்சமைவுற்றார். (௪௧)

வேறு.

குருபாதம்பூசிநாளுங் குருநாமஞ்செபியெப் போதுங், குருபாதந்தியானம்பண்ணு குருகீர்த்தி தோத்திரஞ்செய், குருபாதநினைக்கத்தீருங் குருத்தோடமல்லாத்தோடங், குருபாதந் தன்மேலுண்டோ குருவின்பேர்சிவனுமன்றே. (௪௨)

வேறு.

வருபிறப்பறவேவேண்டிநான்மறையீறென்னு மம்புயத்தினைமலர்த்தற், கிரவியாய்நெஞ்சிற்கிசைந் தநற்குருவை யாதொருவழியினுலிறைஞ்சி, யருள் சுரந்திடுதற்காவதேசெய்வா னருமறைமுடிவெலா மறையும், பொருளேநேராகவுமக்கெனக்கீசன்புகன் றவப்படியிலேபுகன்றேன், (௪௩)

வேறு.

ஆசிரியன்முன்பாக வகண்டார்த்தத்தைநடை வாக வறிவுற்றமாஞானந்தத், தேசிகனைத்திரவிய மேமுதலிருந்துந் திடமானமேலாபத்தாற்பூசியானே ன், மோசனமேயிலாதவனுய்க்கும்பிபாக முதலிய தில் வீழ்ந்திடுவனுதலாலே, தேசிகனையாவிபொரு ளாக்கையாலே தினந்தினமும் பூசிக்கவேண்டுமா ஞான். (சச)

வேறு.

தேசிகருமாணவர்கள் செய்தியுணர்ந்திடவேசி றியோரைப்பெரியோர்செய் தொழிலதனிற் செறித் து, மேசிலராம்பெரியோரை யீனமாந்தொழிற்சே யிசைத்துமடித்தும்வைது மிவ்வாறுசெயவுங்,கூசி யிடாதிட்டபணிசெய்துகுருபத்தி குறைவிலராய் ந ம்பினராய்த்துரோகமின்றி,மாசிலராய்மனவாக்குக் காயத்தாற்குருவின்வாக்கியபாலனஞ்செய்யு மதிமா னுமாயே. (சரு)

வேறு.

குருபரனுக்கவனெஞ்சகம்போ லனுகூலத்த னய்க், கரசரணாதியினேவல்செய்தேதினங் கட்டி மைபோ, லுரியமனைமுதலி யாவையுங்காத் துண் மையாயொருதற், பரமிவனேயெனக்காண்பான்சற் சீடன்பகர்ந்திடினே. (சசா)

வேறு.

தேசிகன்பாற்பற்பலதீக் குணங்கள்செறியினு
நம், பாசப்பிராந்திக்கிவைதோற்றிய விறைபாலிலை
யென், றூசறுபத்தியினோர்ந்தெவ்விதத்து மவனரு
ளைத், தேசங்குலவவளர்ப்போன் சற்சீடன்றெரிந்தி
டினே. (௪௭)

வேறு.

விடையேறியீசன்வரின் மூடருமவன்வேண்
டியதைப், படிமீதளிப்பர்குருவேசிவமெனப்பாவ
ணைமுற், றுடையார்கடத்த முடலாவியீந்திறையுண்
மைபெறத், தடையாதுளவிங்குளதேலபக்குவர்தா
மவரோ. (௪௮)

வேறு.

உடற்குயிர்போற்கட்கிமைபோ லாசினாலெலா
த்து, விடற்புலிதீப்பாம்பினில்வீழ்வார்க்காஞ்சுடர்
ச்சுடினும், வாழைக்காகா வேதிமட்கலத்திற்காகா
வா, றேழைக்காகாதிது. (௪௯)

வேறு.

ஆசான்மொழியானாற்பொருளாலன்றிப்பெற
வுமரிதாகுந், தேசார்குருநான்மாணுக்கன்சிறக்கவி
ம்மூவருங்கூடிற், பாசாதீதப்பரமெய்தும் பன்னுணீ
ங்காவிக்கூட்ட, மேசாவுணர்வைத்தரும்பகற்போ
தெல்லாத்தொழிலுந்தருவதுபோல். (௫0)

பாடல் முற்றிற்று.

## வசனம்.

ஸ்திரீயானவள் நாயகனோடே கூடிக்கொண்டிருந்தாற்பணிவிடைசெய்யவேண்டுமென்றுதனித்திருந்தால் சுகமாயிருக்கலாமென்றும் நினைத்துஅந்தநாயகனுக்கு மனவருத்தமுண்டாகும்படியாயவனை விட்டு நீங்கி இருந்தா லிம்மையிற்சுகமுமிழந்து மறுமையில் நரகமுமனுபவிப்பதுபோலச் சீடனானவன் ஞானாசாரியரிடத்திற்குப்போயவரிடத்திற் சில சாத்திரங்களை யப்பியாசித் தறிந்துகொண்டு நாமினி யிவரிடத்திலே யிருந்தா லிவருக்குப்பணிவிடை செய்துகொண்டிருக்கவேண்டுமென்றும் நம்முடையசிரவணாதியனுசந்தானத்துக்கு விரோதம்வருமென்றுமிவரிடத்தில்நமக்குதேகத்துக்கொத்துக்கொள்ளாதென்றுமிதுமுதலானகாரியங்களை நினைத்து அந்த ஞானாசாரியருக்கு மனதிற்றுவேசம் வரும்படியா யவரைவிட்டு நீங்கியிருக்கின்றவனுக்கு இம்மையிற்றுன்பமு மறுமையில் நரகமு முண்டாகுமாதலால் கற்புடைய ஸ்திரீயானவ ளடியாமையைப் பொருந்தியிருந்து மாத்மசொரூபத்தையறியாம லனாத்மசொரூபமே தானென்றிருக்கின்றதனது நாயகனைத் தெய்வமாகப் பாவித்து அவன் அடித்து வைதல்முதலாயின செய்தபோதினு மவனிடத்திற் றுவேசமன்றியிற் பிரியமாகதேகமுள்ள

பரியந்த மவனை விட்டு நீங்காமற் றிரிவித கரணங்க
ளாலும் பணிவிடைசெய்து கொண்டிருக்கின்றவனு
க்கு இம்மையிற்சுகமு மறுமையிற்சொர்க்காதிலோ
கமுமுண்டாவதுபோல உத்தமமான விவேகமுள்
ள முமூட்சுவானவன் ஞானாசாரியனை சத்தியக்
ஞான அனந்தானந்த பரமசிவமென்று வேதாதி
கள்சொன்ன பிரகாரம் நம்பி அவரடிமுதலானகா
ரியங்கள் செய்தபோதிலுஞ் செய்யத்தகாத கிர்த்தி
யங்களைச் செய்யச்சொன்ன போதிலும் வெறுப்ப
டைந்து அவரைவிட்டு நீங்காதபடிக்கு மிகுந்தபிரி
யத்தோடுந் தேகமுள்ளவரைக்குந் திரிவிதகரணங்
களாலும் பணிவிடைசெய்து நின்று அந்தக் குருசு
வாமி கிருபையால் தத்துவக் ஞானத்தைப்பெற்று
மோக்ஷமடையவேண்டுமென்று வேதாகமபுராண
ங்கள் கூறுதலால் இப்போதிருக்கின்ற முமூட்சுக்க
ளு மிதிற்சொன்ன பிரகாரம் ஞானாசாரியனைப்பரம
சிவமாகப் பாவித்துத்தேகமுள்ள பரியந்தமு மவ
னைவிட்டு நீங்காமற் றிரிவிதகரணங்களாலும் பணி
விடை செய்து நின்று அவர் கிருபையாலுண்டாகா
நின்ற தத்துவக்ஞானத்தினாற் பரமோக்ஷசுகத்தை
யடையவேண்டியது.

சிட்டாசாரம்-முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# ஏதுசொரூபங்காரிய மவதிபலலக்ஷணம்.

## காமத்துக்கு.

ஏது, அஞ்ஞானம், சொரூபம், அக்கினியில் நெய்விட்டால் விர்த்தி யடைகிறதுபோல நமக்கிருக்கின்ற போகமெல்லா முத்தரோத்தரமாய் விர்த்தி யடையவேண்டுமென்றும் நமக்கிருக்கின்ற ஐசுவரியமெல்லாமாறுமலிருக்க வேண்டுமென்றும்ஸ்திரீ முதலான விடயங்கள்மென்மேலும் வேண்டுமென்றும் நானாவிதமாய்ச் சிந்திக்கப்படுகிறது, காரியம், அந்த விடயத்திலுண்டான பிரியத்தை நானாவிதமாய்ச் சிந்தித்துத் தானிருந்த விடத்தைவிட்டு லோகாலோகங்களுக்குப்போய் நரகாசூரன் முதலானபேர்களைப்போல இஷ்டமான வஸ்துக்களைச் சம்பாதிக்கிறது, அவதி அத்தியந்த நிராசையுதையம். (௧)

## குரோதத்துக்கு.

ஏது, ஆசை, சொரூபம், ஆசையானவிடயத்தில் விக்கினம் பண்ணினவனிடத்திற் கோப முண்டாய் வியாக்கிரரூபமாய் நோக்கிக் கடினமான வசனந்

சொல்லுகிறது, காரியம், தன்னாற்செயிக்கப்படுமா
னால் பகாசூரன் முதலானபேர்களைப்போல அடிமு
தலான காரியங்கள் பண்ணுகிறது தன்னாற் செயிக்
கக்கூடாதிருந்தா லுள்ளே யிருந்துகொண்டு பொ
ருமியழுகிறது, அவதி, அத்தியந்தஞ் சாந்தமாயிரு
க்கின்ற பொறுமையுடைமையும். (௨)

லோபத்துக்கு.

ஏது, மோகம், சொரூபம். தேனீயுங் கவரிமா
னும்போலத் தான் சம்பாதித்த செல்வ முத
லான வஸ்துக்களிற்றேகமுள்ளளவு மொருத்தருக்
கு மொன்றுங் கொடுக்கலாகாதென்று சிந்திக்கிற
து, காரியம், தான் சம்பாதித்த பதார்த்தங்களி லூ
ரின் நடுவேயிருக்கின்ற நச்சுமாமரம்போலவுந் துரி
யோதனன் முதலானபேர்களைப்போலவு மொருத்
தருக்கு மொன்றுங் கொடாமல் வைத்துக்கொள்ளு
கிறது, அவதி, அத்தியந்தமுதாரத்துவம்.

இந்தமூன்றுக்கும்பலமேதென்றா லிகலோகப
ரலோக நிந்தையு மிப்போது தேகமுதலானவஸ்து
நாசத்தினாற்றுன்பமும் பின்னாலே ஜனன மரண
சமுசாரமு மனுபவிக்கப்படுகிறது. (௩)

நிராசைக்கு.

ஏது, நிட்காமமாய்ச்செய்கின்ற சற்கருமபுண்
ணிய பரிபாகம். சொரூபம், ஸ்திரீமுதலான விடய

த்திலுள்ள குணதோஷங்களை விசாரித்ததிலுள்ள வாசையை விட்டுவிடுகிறது, காரியம், ஆசைவிட் ட பதார்த்தங்களிற் றதிசிமகாரிஷி முதலானபேர்க ளைப்போலச் சரீரமுதலான வஸ்துக்களைக் கேட்ட பேர்களுக்குக்கொடுத்துவிடுகிறது, அவதி, அத்தி பந்தங்காமத்துக்கு நாசம். (சு)

பொறுமைக்கு.

ஏது, நிராசை, சொருபம், தன் வேலைக்காரன் முதலானபேர்க ளடிமுதலான காரியங்களைச் செய் தபோதிலும் வினைப்பிரகாரம்வருமென்கின்றவிவே கத்தினாற் பொறுத்துக்கொள்ளுகிறது, காரியம், தனக்கபகாரம்பண்ணின பேர்களுக்குப் பூமியைப் போலவுந் தர்மபுத்திரர் முதலான பேர்களைப்போ லவு முபகாரம்பண்ணுகிறது, அவதி, அத்தியந்தங் குரோதத்துக்கு நாசம். (ரு)

உதாரத்துக்கு.

ஏது, குணாகுணங்களைப்பகுத்துப் பார்க்கின்ற விவேகம். சொருபம், ஊரின் நடுவே நிறைந்திருக் கின்ற நல்ல சலமுள்ள தடாகமும் நன்றாய்ப் பழுத் து நிழலுடைத்தாயிருக்கின்ற மாமரமும் போலச் சகல சனங்களுக்கு முபகாரமாயிருக்கிறது, காரி யம், வேர்முதற்கொழுந்துவரைக்கு முயிர்களுக்கு மருந்திற் குபகாரமா யிருக்கின்ற மரம்போலவுஞ் சிவிச்சக்கிரவர்த்தியைப் போலவுங் கேட்டபேர்க

ளுக்கெல்லாங் கேட்டவஸ்துக்களைக்கொடுக்கிறது, அவதி, அத்தியந்தம் லோபத்திற்கு நாசம்.

இந்த மூன்றுக்கும் பலமேதென்று லிகலோக பரலோக கீர்த்தியு மிப்போது துக்கமற்றுச் சுகமா யிருந்துகொண்டு ஞானசாதனஞ்சம்பாதித்துமோ க்ஷமடையபப்படு மிந்த ஞானசாதனஞ் சம்பாதிக்கு ங்காலத்திற் றேகமிறந்தாற் சொர்க்காதி லோகத்தி லுள்ள சுகமனுபவிக்கப்படும். (சு)

நித்தியா நித்திய வஸ்து விவேகத்துக்கு.

ஏது, சித்தசுத்தி, சொரூபம், பிரமமாத்திரஞ் சத்தியம் அன்னியமாயிருக்கின்ற ஜீவேசுர சகத் தெல்லா மசத்தியமென்று சாத்திரத்தினால் நிச்சயி க்கிறது, காரியம். அதைத்தானே சதாகாலமு நானு விதமாய்ச்சிந்திக்கிறது. அவதி, பிரமமாத்திரஞ் ச த்தியமன்னியமா யிருக்கின்ற ஜீவேசுர சகத்தெல் லா மநித்தியமென்றிருக்கின்ற நிச்சயம் ஒன்றினா லும்போகாமல் நன்றாய்த்திடமாயிருக்கிறது. (எ)

இகமுத்தரார்த்த பலபோகவிராகத்துக்கு.

ஏது, இகலோக பரலோகங்களிலுள்ள ஸ்திரீ முதலான விடயங்களில் அசுத்த துக்க வநித்தியத் துவமுதலான தன்மைகளை விசாரித்து வெறுப்பு வருகிறது, சொருபம், அந்த விடயங்களை நாயின் று கக்கின அசனம்போலவுங் காலாக்கினி நரகமு

தலானதுபோலவுங் கண்டு விட்டுவிடுகிறது, காரியம், விட்டவிடயத்தி லொருபோதிலுந் திரும்ப ஆசை வராமலிருக்கிறது, அவதி, தேகத்தை தொட்டுப்பிரமலோக பரியந்தமா யிருக்கின்ற விகலோக பரலோகங்களிலிருக்கிற சகலபோகங்களிலேயு மாசையில்லாமற் றிரணம்போல உபேட்சையா யிருக்கிறது. (அ)

சமாதிசட்கசம்பத்திக்கு.

ஏது, இயமநியமாதி, சொரூபம், விடயத்திலே பிறவிர்த்தி யற்றிருக்கிற சித்தநிரோதம், காரியம், ஒன்றிலேயும் பிறவிர்த்தி யற்றபடியினாலே விவகாரக்ஷயம், அவதி, பிறவிர்த்தி யற்றபடியினாலே சுழுத்தியைப்போலே தேக முதலான விடயங்களை மறந்திருக்கிறது. (கூ)

முமூட்சுத்துவத்துக்கு.

ஏது, சாதுசங்கம், சொரூபம், தலை ரோமத்திலே நெருப்பு பற்றிக்கொண்டவனைப்போலப் பின்னையொன்றிலேயு மாசையில்லாமல் மோக்ஷமாத்திரத்திலே தீவிரமாக ஆசை யுண்டாகிறது, காரியம், சற்குருவைத்தேடி யடைகிறது, அவதி, சகல கருமங்களையுந் தியாகம்பண்ணுகிறது.

இந்தச்சாதனங்கள் நாலுக்கும்பலமேதென்றால், இந்த நாலு மொருமித்துக்கூடாமல் வேறுவேறாய்ப்பிரிந்திருந்தாற் சொர்க்காதியாயிருக்கின்ற பு

ண்ணியலோகப்பிராப்தியே பலம், நாலுமொருமித்
துக்கூடினு லிங்கேதானே ஆத்மவிசாரபலம். (க0)

பந்தத்துக்கு.

ஏது, கருமசாஸ்திர வனுட்டானம், சொருப
ம். திரிசியமாய்த்தோற்றுகின்ற சிந்தனை, காரியம்,
திரிசியத்தினிடத்தில்வாசனையோடுநானுவிதமாய்ச்
சத்தியமா யழுந்துகின்ற சிந்தனை, அவதி, சகல தி
ரிசியமு மில்லையென்கின்ற வத்தியந்தா பாவக்ஞா
னம், பலம், சமுசார துன்பம். (கக)

மோட்சத்துக்கு.

ஏது, ஞானசாஸ்திரவனுட்டானம், சொருப
ம். திரிசிய சிந்தனை யில்லாமலிருக்கிறது, காரியம்,
திரிசிய சிந்தனையானது வாசனையோடு வத்தியந்த
மொன்று மில்லாமலிருக்கிறது, அவதி, சின்மாத்தி
ரமாய் விளங்குகிறது, பலம், பிரமானந்தம். (க௨)

ஞானத்துக்கு.

ஏது, சிரவணமனனநிதித்தியாசனம், சொரு
பம், சுவானுபவத்தினாலே தேகாதிப்பிரபஞ்ச மநித்
தியமென்றுந் தானுகின்ற வகண்டபரிபூரண சச்சி
தானந்தப்பிரமமே சத்தியமென்றும் வேறுபட்டிரு
க்கிறது, காரியம், மித்தையான தேகாதிசகத்தினி
டத்திலே சத்தியபுத்திவாராமலும் ஆத்மாவினிட
த்திலே தானென்றுறைத்த சத்தியபுத்தி வாங்காம

லிருக்கிறது, அவதி, அஞ்ஞானகாலத்திற் சந்தேக விபரீதமன்றியிலே தேகமேதா னென்றிருந்தாற் போல ஞானகாலத்திலே தேகோகமென்கின்ற புத்தியை வாதிக்காநின்ற சிவோகமென்கின்ற உறைப்புத்திடம், பலம், அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்காரமான மோக்ஷம். (கந)

அஞ்ஞானத்துக்கு.

ஏது, நிரோது, சொரூபம், ஒன்பது விதத்தினாலும் நிரூபிக்கப்படாமலிருக்கின்றது, காரியம், ஈசுர சகத்தாய்த் தோற்றுகிறது, அவதி, ஞானோதயம், பலம், நிஷ்பலம். (கச)

அசம்பாவனைக்கு.

ஏது, சிரத்தையுடன் வேதாந்த சிரவணஞ் செய்யாமை, சொரூபம், ஆத்ம சொரூப சிந்தனையை மறைத்தல். காரியம், ஈசுர சகத்துச் சிந்தனையைத்தோற்றுவித்தல், அவதி, அவதி பரியந்தமுண்டான சிரவணம், பலம் தாபத்திரயத் துன்பப்படுகிறது. (கரு)

சமுசயபாவனைக்கு.

ஏது, விசாரமில்லாமலிருக்கிறது, சொரூபம், தான் கர்த்தாவோ சாட்சியோ, சாட்சி யென்றாலுங் கர்த்தத்துவ போத்தத்துவாதி யுண்டோ வில்லையோ, கர்த்தத்துவாதி யில்லாவிட்டாலும் அவருக்குப் பூரணத்துவ முண்டோ வில்லையோ பூரணத்

துவமுண்டானாலும் அவனை யறியக்கூடுமோ கூ
டாதோ, அவனை யறிந்தாலும் மோட்சம் வருமோ
வாராதோ வென்று இது முதலாய்வருகின்ற சித்த
விருத்திகள், காரியம், முன்சொன்ன சித்தவிருத்திக
ள் திரும்பத்திரும்பப் பலவிதமா யுண்டாகிறது,
அவதி. தீர்க்க காலவிசாரம், பலம், இகலோக பர
லோக போகங்க ளிரண்டு மற்றுத் துன்ப மடைகி
றது. (கசு)

## விபரீதபாவனைக்கு.

ஏது, ஆத்மத்தியானஞ் செய்யாதிருக்கின்ற
து, சொரூபம். தேகமே தானென்றும் பிரபஞ்சஞ்
சத்தியமென்றும் இது முதலாய் வருகின்ற விருத்தி
கள், காரியம், நான் பிராமணாதி வருணமென்றும்,
நான் பிரமச்சாரி முதலான ஆச்சிரம மென்றும்,
நான் காத்தியாயினர் முதலான குலமென்றும், நா
ன் கிருஷிமுதலான தொழில் பண்ணுகிறவ னென்
றும், நான் யாகாதிகள் பண்ணினேன், நான் அன்
னாதிகள் பொசித்தேன், நான் கடாதிகளை யறிந்தே
னென்றும் இது முதலாக வருகின்ற விருத்திகள்,
அவதி, நாமரூபப்பிரவிர்த்தி யில்லாம லிருக்கின்ற
தானாகிற ஆத்மத்தியானம், பலம். செனனமரண
சமுசார துக்கத்தி லடிபடுகிறது. (கஎ)

## சிரவணத்துக்கு.

ஏது, மூன்று சாதனமும் வந்து அதிதீவிரமா
யிருக்கிற முமூட்சுத்துவம், சொரூபம், வேதாந்தக்

உசு ஏதுசொரூபங்காரிய மவதிபலலக்ஷணம்.

நிர்ந்திரமான சாஸ்திரங்களைச் சிரவணம்பண்ணுது அத்தேராய்த வாத்மாவாயிருக்கின்ற சொரூபத்தை ஆறுலிங்கத்தினுலுஞ் சதா சிரவணம்பண்ணி ஆத்மா வுண்டென் றறிகிறது, காரியம். ஆத்மா இல்லையென்கின்ற அசத்தாவரணம் நசிக்கிறது. அவதி, நஷ்டமாய்ப்போனஅசத்தாவரணந்திரும்ப வாராமலிருக்கின்ற பரியந்தஞ் சிரவணம் பண்ணுகிறது, பலம். திடமாயிருக்கின்ற பரோட்சக்ஞானம்.

மனனத்துக்கு.

ஏது, அவதிபரியந்தம் சிரவணம்பண்ணியுண்டாயிருக்கின்ற நித்தியா நித்திய வஸ்துவிவேகம், சொரூபம், சூட்சுமமான புத்தியினுலே யேகாக்கிரமா யிருந்துகொண்டு பஞ்சகோசத்தில் அத்வைத ஆத்மதத்துவத்தை விசாரித்துத் தானென்றறிகிறது, காரியம், ஆத்மாவிருந்தாற் ருேற்ருரோ இல்லையென்கின்ற அபாநுவரண நஷ்டமாகிறது. அவதி. நஷ்டமான அபாநுவரணந் திரும்பவாராமலிருக்கின்றபரியந்தம் விசாரம்பண்ணுகிறது, பலம், அபரோட்சக்ஞானம், (கசு)

நிதித்தியாசனத்துக்கு.

ஏது, சாதனசதுட்டயத்துடனேகூடி அவதிபரியந்தம் நன்ருயனுட்டிக்கப்பட்ட சிரவண மனனங்கள், சொரூபம், அகண்டபரிபூரண சச்சிதானந்தப்பிரமமேநான் நானே அகண்டபரிபூரணசச்சி

தானந்தப் பிரமமென்று பிரியத்துடனே விச்சின்
னமன்றியிலே தைலதாரைபோலச் சுசாதீகவிருத்தி
யோடே சந்ததந் தியானம்பண்ணுகிறது, காரியம்,
உள்ளிலும் புறம்பிலுஞ் சத்தாதிவிடயங்கள் தோ
ற்றுமற் றியானமாத்திரமா யிருக்கிறது. அவதி, தி
யானமுந் தியானிக்கப்படுகின்றவனு மிழந்து சுத்
தசத்துவமன தாய்ப் பாலிற்கலந்தசலம்போல அக
ண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரமத்தில் ஏகாச
மாய்க் கலந்திருப்பது, பலம், அப்பிரதிபந்தஅபரோ
ட்ச சாட்சாத்காரமான ஞானம். (உ௦)

வாசனைக்கு.

ஏது, பகிர்முக நாட்டமாகிய விடயசன்னதி,
சொரூபம், மதுபானம் பண்ணினவன் றனது சுபா
வந்தெரியாம லதனது சுபாவமா யிருக்கின்றது
போல வநாதிகாலந்தொட்டு இருதயத்தில் வசித்து
க்கொண்டிராநின்ற அசுத்தவாசனையாகிய காமாதி
விருத்திகளால் முன்பின் றொன்றையும் விசாரித்
துப்பாராமல் அந்தந்த விஷயாகாரத்தை யடைந்
திருக்கிறது, காரியம், முன்சொன்ன வசுத்தவாச
னையாகிய காமாதிவிருத்திகள் பலவிதமாயுண்டாய்
அமிர்தமாயு மணுவுக் கணுவாயும் அத்வைதமாயு
மகண்டானந்தமாயு மிருக்கின்ற தனதாத்மசுபாவ
ந்தோன்றாம லிருக்கிறது. அவதி, மனோலயம், பல
ம், சுகதுக்காதியு மதனால் விட்சேபம் இல்லாததா

யும் விமலமாயும் விஞ்ஞானமாயும் விமுத்தமாயும் விபுவாயுமிருக்கின்ற பிரமசொரூபமென்கின்ற தத்துவக்ஞான நிவிர்த்தியுமதனாற் சனனமரண சமுசாரமு முண்டாகப்படும். (உக)

வாசனாக்ஷயத்துக்கு.

ஏது, அசுமுக நாட்டமாகிய விடயசன்னிதித்தியாகம், சொரூபம், சமர்த்தனானவன் றனக்குப்பகையாளனிடத்தி லுண்டானகுற்றத்தை நன்றாய் விசாரித்தறிகின்றதுபோலக் காமாதி யசுத்தவாசனைகட்குள் தன்னிடத்தி லின்னவின்ன வசுத்தவாசனைக ளிருக்கிறதென்று நன்றாய்ப் பகுத்தறிந்து கொண்டு வியாதியுடைத்தா னவன்றன்னிடத்தி லின்னவின்ன வியாதி யிருக்கிறதென்றறிந் ததுவதுகளுக்குத் தகுந்த வவுடதங்களைப் புசிக்கின்றதுபோல மைத்திரியாதி சுத்தவாசனைகட்குள் அதுவதுகளுக்குத் தகுந்த சுத்தவாசனையைச் சிரத்தையோடுந் தினந்தோறும் நன்றாயப்பியாசிக்கின்றது, காரியம், முன்புசித்த அவுடதத்தால் ரோகம்நாளுக்குநாள் சாந்தமா யாரோக்கிய முண்டாகின்றதுபோல நாளுக்குநாள் காமாதியசுத்தவாசனைகள் சாந்தமாய் மைத்திரியாதி சுத்தவாசனைகள் விர்த்தியடைகின்றது, அவதி, முன்சாந்தமான காமாதியசுத்தவாசனைகள் திரும்பவுண்டாகாமலிருக்கின்றது, பலம், சித்தோபசாந்தமு மதனால் அமலமாயு

மக்கிரியமாயு மப்பிரமேயமாயு மசங்கமாயு மிருக்கி
ன்ற பிரமசொரூபமே நான் நானேயமலமாயு மக்
கிரியமாயு மப்பிரமேயமாயு மசங்கமாயு மிருக்கின்
ற பிரமசொரூபமென்கின்ற தத்துவக்ஞான ரட்
சையு மதனாற் சனனமரண சமுசாரதுன்ப நீக்கமு
ம்வரும். (உஉ)

மனத்துக்கு.

ஏது, பகிர்முக நாட்டத்தாலுண்டாகிறகாமா
திவாசனைகள், சொரூபம், மெழுகு சலமுதலான
வஸ்துக்கள்போல வநேகவிருத்திகள் பரிணமிக்கி
ன்றதற் கேதுவாயுந் திரிகுணாத்மகமாயு மியானெ
னதென் றபிமானமுடைத்தாயு மிருந்துகொண்டு
தீபச்சுவாலைபோல அத்தைப் பண்ணவேண்டு மித்
தை விடவேண்டுமென்று மத்தைப்புசிக்கவேண்டு
மித்தைநீக்கவேண்டு மென்று மத்தைப்பார்க்கவே
ண்டுமித்தைப்பார்க்கவேண்டாமென்றுமிதுமுதலா
யுண்டாகாநின்ற விருத்திகள், காரியம், முன்சொன்
னவிருத்திகள் க்ஷணேக்ஷணே நானாவிதமா யுண்
டாகி நித்த சுத்த புத்த முத்த சத்திய பரமானந்த
சொரூபந் தானென்று தோன்றாமலிருக்கிறது, அ
வதி, வாசனாட்சயம், பலம். வாசனாவிர்த்திகளினாம்
சத்தாயுஞ் சர்வசமமாயுஞ் சர்வசாட்சியாயுஞ் சர்
வாத்மகமாயு மிருக்கின்ற பிரமசொரூபமே நான்
நானேசத்தாயுஞ் சர்வசமமாயுஞ் சர்வசாட்சியாயு
ஞ் சர்வாத்மகமாயு மிருக்கின்ற பிரமசொரூபமெ

ன்கின்ற தத்துவக்ஞான நிவிர்த்தியு மதனாற்சனன
மரண சமுசாரதுன்பமு மனுபவிக்கப்படும்.(உ௩)

மனோலயத்துக்கு.

ஏது; அகமுக நாட்டத்தா லுண்டாகின்ற கா மாதி வாசனாட்சயம். சொரூபம், மிகுந்த சிரத்தை யுடனே சத்தியக்ஞானவனந்தானந்த பிரமசொரூ பமே நான் நானே யந்தச் சத்தியக்ஞான வனந்தா னந்தப்பிரமசொரூபமென்று பிரியத்துடனே விச் சின்னமன்றியிலே தைலதாரைபோலச் சுசாதீக வி ருத்தியுடனேகூடிக்கொண்டுசந்ததந்தியானம்பண் ணுகிறது, காரியம். வாசனாட்சயத்தினாற்றாமதராசத விருத்திகள் கெட்டுப்பாலிற்கலந்தசலம்போல நிர்க் குணமாயும் நிர்மலமாயும் நிர்விகாரமாயும் நிர்விக ற்பமாயும் நித்தியானந்தமாயுமிருக்கின்ற தன தாத் மசொரூபத்தில் சுத்த சாத்திக விருத்தி மாத்திரமா ய் லயித்திருக்கின்றது, அவதி, முன் சாந்தமான தாமதராசதவிருத்திகள் திரும்பவுண்டாகாம லிருக் கின்றது, பலம். வாசனாட்சயத்தினால் சுத்தமாய்ச் சுபாவமாய்ச் சுகமாயிருக்கின்ற பிரமசொரூபமே நான் நானே சுத்தமாய்ச் சுபாவமாய்ச் சுகமாயிருக் கின்றபிரமசொரூபமென்கின்றதத்துவக்ஞானரட் சையாய் அதனாற் சனனமரண சமுசாரதுன்ப நீங் கிப் பிரமானந்த மனுபவிக்கப்படும்.

ஏதுசொரூபங் காரிய மவதிபல லக்ஷணம்
முற்றுப்பெற்றது.

---

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# அஷ்டப்பிரமாணத்தின் திஷ்டாந்த தாஷ்டாந்த உரை.

உற்றெதிரேகாண்டல் பிரத்தியட்ச மனுமான மோங்குபுகைகண்டு நெருப்புண்டெனவே யுணர் தன், மற்றுவமைமரை பசுப்போலெனல் சத்தம் பெரியோர்வாய்ச் சொலருத்தாபத்தி மதத்தவுடல தனு, லற்றவுப்வாசி யொளித்துண்பா னென்றுண ர்தல பாவமுன்பினிடை யொருகாலத்து மிலையெ னரூ, னற்றியவிம்மரத்தினிற் பேயுண்டெனலைதீக நாட்டுதலே சம்பவம்பிரமாணமெட்டா நவிலும்.

## பிரத்தியட்சம்.

(உற்றெதிரேகாண்டல் பிரத்தியட்சம்) என் றது கட்டையை பிரத்தியட்சமாய்ப் பொருந்திக் காண்பதுவே பிரத்தியட்சப்பிரமாணம். இது விப ரீதப் பிரத்தியட்சம், சந்தேகப்பிரத்தியட்சம், யதா ர்த்தப்பிரத்தியட்சமென மூன்றுவகைப்படும். அதா வது. கட்டையைக் கள்ளனென்றே நிச்சயிப்பது விபரீதப் பிரத்தியட்சம். கட்டையைக்கண்டு கள்ள ஞேதறியோவென்பது சந்தேகப் பிரத்தியட்சம்.

கட்டையைக் கட்டையென்றறிவதுவே யதார்த்த ப்பிரத்தியட்சம். இதுவே பிரத்தியட்சப்பிரமாண ம். இதற்குத் தாட்டாந்தமென்னவென்றால் சராச ராத்மகப்பிரபஞ்சங்களைப் பிரத்தியட்சமாயறியாநி ன்றவறிவாகிய பிரமசொரூபந் தானென்றறிவது வே பிரத்தியட்சப் பிரமாணம். இது விபரீதப் பிர த்தியட்சம், சந்தேகப்பிரத்தியட்சம், யதார்த்தப் பிரத்தியட்சமென மூன்றுவகைப்படும். அதாவது ஆசாரியர் சீடனைப்பார்த்து நீயே அறிவாகிய பிரமசொரூபமென் றனுக்கிரகம்பண்ண அப் போது சீடனானே யறிவாகி பிரமசொரூபமானா ற் பிரத்தியட்சமாக வல்லவோ விளங்கவேண்டும். அப்படி யறிவாகிய பிரமசொரூபம் பிரத்தியட்ச மாய் விளங்காமற் றேகமல்லவோ பிரத்தியட்சமா ய் விளங்குகிறதென்பதுவே விபரீதப் பிரத்தியட்ச ம். அப்போது ஆசாரியர்தேகமே பிரத்தியட்சமா ய்விளங்கினாற் சொற்பனத்திலுன் சரீரமிவ்விடத் திற் சுகமாய் மெத்தையிற் படுத்திருக்கவும் நானா விததேசத்தினானாவிதசரீரமெடுத்துக்கொண்டு துக் கப்படுவது ஆரென்றுகேட்க அப்போது சீடனான வன் சுவாமீ வேறொன்றுபோலத் தோற்றுகிறது. ஆனாலுந் தேகந்தானோ அறிவுதானோ வென்பது வே சந்தேகப்பிரத்தியட்சம். அப்போது ஆசாரிய ர் அறிவாகி பிரமசொரூபஞ் சுழுத்தியிலொன்று

மறியாத வஞ்ஞானவிருட்டிலே நானொன்று மறி
யேன் சுகமாய் நித்திரைபண்ணினேனென்று அறி
கிறபடியினாலேயுஞ் சாக்கிரத்திற் றேகத்திற்குள்
ளே சோமசூரியாக்கினியாதி பிரகாசங்களில்லாமலி
ருக்கவும் மனோராச்சியத்திற் றோற்றுகின்ற நாமரூ
பங்களை விளக்குவித்து அறிகிறபடியினாலேயுந் தே
கத்துக்குவெளியி னானாவித கடபடாதி வியர்பாரங்
களை யறிகிறபடியினாலேயுந் தேகமிவைகளொன்
றையு மறியாதபடியினாலேயுந் தேகநீயல்ல. இப்ப
டிப் பிரத்தியட்சமாய் விளங்காநின்ற அவத்தாத்தி
ரய சாட்சியாயிருக்கின்ற வறிவாகிய பிரமசொரூப
மே நீயென்றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடனே
றிவாகிய பிரமசொரூபந்தானென் றறிந்ததுவே
யதார்த்தப் பிரத்தியட்சம். இதுவே பிரத்தியட்ச
ப்பிரமாணம்.

## அனுமானம்.

(அனுமானமோங்கு புகைகண்டு நெருப்புண்
டெனவே யுணர்தல்) என்றது, விர்த்தியடையாநி
ன்ற புகையைக்கண்டு அக்கினியுண்டென்றறிவது
வேயனுமானப்பிரமாணம். இது, பிரதிக்கினை, ஏது
திட்டாந்தம், என்று மூன்றுவிதத்தா லறியப்படும்.
அதாவது பருவதத்தி லக்கினியுண்டென்பது, பிர
திக்கினை. அதிலக்கினியுண்டென்பதற்கு. ஏதுவெ
ன்னவென்று கேட்கப் புகையைக்கண்டு. அக்கினி

யுண்டென்றுசொன்னேனென்பதுவே. ஏது, புகை யுண்டானவிடத்திலக்கினியுண்டென்பதற்குத்திட் டாந்த மென்னவென்று கேட்க, மடைப்பள்ளியிற் புகையைக்கண்டு அக்கினியைக்கண்டேனென்பது வே திட்டாந்தம், இதுவே அனுமானப் பிரமாண ம். இதற்குத் திட்டாந்தமென்னவென்றாற் சகலத் தையும் விளக்குவித்தறிகிறபடியினாற் பஞ்சகோச த்தி லறிவாகிய பிரமசொரூப முண்டென் றறிவது வேயனுமானப்பிரமாணம். இது பிரதிக்ஞை, ஏது, திட்டாந்த, மென மூன்றுவிதத்தா லறியப்படும். அதாவது ஆசாரியர்,சீடனைப்பார்த்துப் பஞ்சகோ சத்திலறிவாகிய பிரமசொரூபமுண்டென்றனுக்கிர கம் பண்ணுவது,பிரதிக்ஞை. அப்போது சீடன் ப ஞ்சகோசத்திலறிவாகிய பிரமசொரூப முண்டென் பதற்குஏதுவென்னவென்றுகேட்க,ஆசாரியர், தே கேந்திரியாதிகளையு மதினுடைய தொழில்களையு ம றிவதுவே யேதுவென் றனுக்கிரகம்பண்ண, அப் போது சீடனிவைகளை யறிகிறதற்கு அறிவாகிய பி ரமசொரூப முண்டென்பதற்குத் திட்டாந்த மென் னவென்று கேட்க, ஆசாரியர், சுழுத்திமூர்ச்சையா திகாலங்களிலே சகல கரணங்களு மிறந்திருக்கவும் விருத்தி வந்தவுடனே யொன்று மறியாத வஞ்ஞா னத்தையு மதிற் பிரதி விம்பித்த ஆனந்தமுதலான வைகளையுமறிந்து சொல்லுகிறதே திட்டாந்த மெ

ன்றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடனானே யதி
வாகிய பிரம சொரூபமென் றறிந்ததுவே யனுமா
னப்பிரமாணம்.

## உவமானம்.

(மற்றுவமைமரைபசுப்போலெனல்) என்றது
பசுவைப்போலிருக்கும் மரையென்பது உவமானப்
பிரமாணம். இதற்குத் தாட்டாந்த மென்னவென்
ருல், ஆசாரியர், சீடனைப்பார்த்துச் சராசராத்மகப்
பிரபஞ்சங்களுக்கெல்லா மிடமாயுஞ் சகலத்திலும்
பொருந்தியும் பொருந்தாமலிருக்கின்ற பூதாகாச
த்தைப்போலச் சிதாகாச சொரூபமா யிருக்கின்ற
பிரமஞ் சகலஅண்டங்களுக்கெல்லா மிடமாயுஞ் ச
கலத்திலும் பொருந்தியும் பொருந்தாம லிருக்கின்
றது. அந்தச்சிதாகாச சொரூபமாகிய பிரமமே நீ
யென் றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன் சிதா
காசசொரூபமாகிய பிரமந் தானென்றறிந்ததுவே
யுவமானப்பிரமாணம்.

## ஆகமம்.

(சத்தம் பெரியோர் வாய்ச்சொல்)என்றது,சொ
ர்க்கத்திலே யமுதாதிபோகங்க ளிருக்கின்றன. யா
காதிகிருத்துக்கள்செய்தா லந்தப்போகங்களையடை
யலாமென்று மேலோர்கள் சொல்ல அந்த வார்த்
தையை நிச்சயமாய்க்கேட்டு அந்தப்படி யாகாதி கி
ருத்துக்கள் செய்து அமுதாதிபோகங்களையடைவ

துவே யாகமப்பிரமாணம். இதற்குத் தாட்டாந்த மென்னவென்றால், ஆசாரியர், சீடனைப்பார்த்துத் தேகத்திற் சர்வசாட்சியாகிய சச்சிதானந்தசொரூ பமிருக்கிறது. தேகேந்திரியாதி சகங்களை நெயதிப ண்ணியந்தர்முகமாய் நாடினலந்தச் சர்வசாட்சி யாகிய சச்சிதானந்தசொரூபத்தை யடையலா மெ ன்றனுக்கிரகம்பண்ண, அவ்வாறுசீடன் துவம்பத தற்பதங்களை விசாரஞ்செய்து தேகேந்திரியாதிசக ங்களை நெயதிபண்ணி யந்தர்முகமாய் நாடி அகண் டாகார விருத்தியினால் தன்னைச் சர்வசாட்சியாகிய சச்சிதானந்த சொரூபமாயறிந்ததுவே யாகமப் பிர மாணம்.

## அருத்தாபத்தி.

(அருத்தாபத்தி மதத்தவுடலதனை லற்றவுப வாசி யொளித்துண்பானென்றுணர்தல்) என்றது, நித்திய வுபவாசியென்கின்றவனுடைய தேகபீனத் துவத்தைக்கண்டு இவனித்திய வுபவாசியானாற் றேகமிளைத்தல்லவோ விருக்கவேண்டு மப்படி யிளை யாமற் பெருத்திருக்கின்றபடியினாலிவனி ராக்கால த்திலொளித்துப் புசிப்பானென்றதுவே அருத்தா பத்திப் பிரமாணம். இதற்குத் தாட்டாந்தமென்ன வென்று, லாசாரியர், தேகமே யாத்மாவென்றிருக் கின்ற சீடனுட் சச்சிதானந்த லட்சணத்தையுடை ய பிரமசொரூபத்துக்கன்னியமான வசத்துச் சட

ந்துக்கத்தைக்கண்டு தேகமே யாத்மாவானும் சச்சி
தானந்த லட்சணமாயல்லவோ விருக்கவேண்டும்.
அப்படியிராமற் காலத்தினாற் கெட்டுப்போகின்ற
படியினா லசத்தாயுஞ், சுழுத்திமூர்ச்சைகளி லொன்
றையு மறியாதபடியினாற்சடமாயுந், தேகந்தோற்று
கின்ற சாக்கிர சொற்பனங்களிற் கிலேசப்படுகின்ற
படியினாற் றுக்கமாயு, மிருக்கின்றபடியினாற் சரீரத்
திரயங்களு மாத்மாவல்ல. பூருவத்திற் செய்திராநி
ன்ற புண்ணியாதிகளினா லிப்போது செல்வவானா
கியா யிருக்கிறோமென்று, மிப்போது செய்யாநின்ற
புண்ணியாதிகளினா லினிமேற் சொர்க்கமுதலான
போகங்களை யடைவோமென்று, மிப்போது மிருக்
கிறோமென்று, மிப்படித் திரிகாலத்தினு மிருக்கிறவ
னுபவ மிருக்கின்றபடியினாற், சத்தாயுஞ், சுழுத்தி
மூர்ச்சை முதலானவைகளை யறிகிறவனுபவ மிருக்
கின்றபடியினாற், சித்தாயுந், தேகந்தோற்றமலிருக்கி
ன்றசுழுத்திசமாதிகளிற்சுகானுபவ மிருக்கின்றபடி
யினா, லானந்தமாயு, மிருக்கிறபடியினாற்சச்சிதானந்த
லட்சணமுடைய பிரமசொரூபமேநீயென்றனுக்கி
ரகம்பண்ண அவ்வாறு சீடன் சச்சிதானந்த லட்ச
ணமுடையபிரமசொரூபந்தானென்றறிந்ததுவேய
ருத்தாபத்திப் பிரமாணம், இதைத் திட்டவருத்தா
பத்தியென்று மின்னம் வேறேகேள்வி யருத்தாப
த்தியுண்டென்றுஞ்சொல்லுவார்கள். அதாவது ஒரு

த்தை யறிந்தால் தாபத்திரய துக்கம் நீங்கிச் சுகம் வருமென் றனுக்கிரகம்பண்ண அவனுமவ்வாறுதே கத்திரயங்களை விசாரித்துத்தள்ளிச் சீவனைக்கண்டு இந்தச் சீவன்றானா ஆன்மாவென்று ஆசாரியரை க்கேட்க அப்போது ஆசாரியரிந்தச்சீவன் அசத்து ச்சடந் துக்கமானபடியினால் இவன் ஆத்மாவல்ல வென் றனுக்கிரகம்பண்ண அந்தச்சத்தத்திற் சீட ன் சச்சிதானந்தமாய் ஆத்மா வேறேயுண்டென்ற றிந்து அவரோ தானாய்ப் பிரமானந்தத்தை யடை ந்து துக்க நிவிர்த்தியானதுவே கேள்வி யருத்தா பத்தி.

## அபாவம்.

(அபாவமுன்பி னிடை யொருகாலத்து மில்லை யெனரூன்) என்றது, ஒருகடத்தைப்பார்த்து இ ந்தக்கட முண்டாகிறதற்கு முன் மண்ணைத்தவிர வேறில்லாதபடியினா லிந்தக்கட முன்னில்லையெ ன்றும், இந்தக்கட முடைந்ததின்பிறகு மண் ணைத்தவிர வேறில்லாதபடியினா லிந்தக்கடம் பின் னுமில்லையென்றும், இப்போது கடந்தோற்றுகின் றகாலத்தும் விசாரித்துப்பார்க்கும்போது மண்ணை த்தவிர வேறில்லாத படியினாலு மிந்தக்கட மிடை யிலுமில்லையென்று, மிப்படித்திரிகாலத்திலும் மண் ணைத்தவிர வேறேகட மில்லாதபடியினாற் சசவி ஷாணககனா விந்தம்போ லிந்தக்கடமொருக்காலு

மில்லையென் றவு மிப்படியறிவதுவே யபாவப்பிரமாணம், இதற்குத் தாட்டாந்த மென்னவென்றால் ஆசாரியார் சீடனைப் பார்த்து இந்தச்சீவி சுரசகத்தாகிய மாயையிருட்டிக்குமுன் பிரம சொரூபத்தைத்தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லிந்தமாயை முன்னேயில்லையென்றும், அத்தியந்தப்பிரளயத்துக்குப் பின் பிரமசொரூபத்தைத் தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லிந்தமாயை பின்னுமில்லையென் றவும், இப்போது அத்தியாரோபமாய்ச்சிருட்டி தோன்றுகின்றகாலத்தும் அபவாதமாய் விசாரித்துப் பார்க்கும்போது பிரமசொரூபத்தைத்தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினா லிந்தமாயை யிப்போதுமில்லையென்று,மிப்படித் திரிகாலத்திலும் பிரமசொரூபத்தைத்தவிர வேறிரண்டாம்வஸ்து வில்லாதபடியினாற் சசவிஷாணங் ககனாரவிந்தம்போ லிந்தச்சீவீசுர சகத்தாகியமாயை யொருகாலத்து மில்லையென் றனுக்கிரகம் பண்ண. அவ்வாறு சீடன், பிரமசொரூபமே யெப்போதுமிருக்கிறது. நானே யந்தப் பிரமசொரூப மென்றும் இந்தச்சீவீசுர சகத்தாகிய மாயையொருக்காலுமில்லையென் று மறிவதுவே யபாவப்பிரமாணம்.

ஐதிகம்.

(நம்பிய விம்மரத்தினிற் பேயுண்டென வைதிகம்) என்றது, நல்லவிடத்திலிருக்கின்ற வொருவட

## திஷ்டாந்த தாஷ்டாந்த உரை.

விருட்சத்தி லொருபுருடனானவ னிலையும்பறித்து
விறகுமொடித் திறங்கும்போது தனக்கு ஆப்தனா
னவன்வந்து அடாபைத்தியகாரா இந்தவிருட்சத்
தில் மகாஎட்சசு இருக்கிறதே யென்றுசொல்ல அந்
தவசனத்தைக்கேட்டமாத்திரமேயந்தப்பசாசுபிடி
த்து மனத்திற்பயமுஞ் சரீரத்திநடுக்கமுமுண்டா
யிலையும்விறகுமெறிந்துபோட்டு மரத்தினின்றுங்கீ
ழேவிழுந்ததுவே ஐதீகப்பிரமாணம். இதற்குத்திஷ்டா
ட்டாந்த மென்னவென்றால், ஆசாரியர், தேகமேதா
னென்றுகொண்டு அதிற் சுகமிருக்கிறதாகப் பிரப
ஞ்சவியாபாரம் பண்ணிக்கொண் டிருக்கின்ற சிட
னைப்பார்த்துத்தேகநீயல்லதேகத்தினிடத்திற்சச்சி
தானந்த சொரூபமாகிய வாத்மாவிருக்கிறா ரவரே
நீயென் றனுக்கிரகம்பண்ண, அந்தவசனத்தைச் சி
டன் சத்தியமாய்க்கேட்டுச் சச்சிதானந்த சொரூப
மாகிய வாத்மாவேதானாய்க் கவலைகெட்டுத் திருப்தி
யடைந்து தேகாதிப் பிரபஞ்சத்தை விட்டதுவே
ஐதீகப்பிரமாணம்.

### சம்பவம்.

(நாட்டுதலே சம்பவம்) என்றது, ஆயிரத்து
க்குள்ளொன்று பத்து நூறு ஐந்நூறு எல்லாமி
ருக்கு மிருந்தாலு மாயிரத்தைத்தவிர வேறில்லை
யென்றறிவதுவே சம்பவப்பிரமாணம். இதற்குத்தா
ட்டாந்த மென்னவென்றால், ஆசாரியர் சிடனைப்

பார்த்துப் பிரமசொரூபமாகிய வுன்னிடத்திற்சரா சராத்மகப் பிரபஞ்சங்க ளெல்லாமிருக்கும், இருந் தாலும் பிரமசொரூபமாகிய வுன்னைத்தவிர வேறல் லவென்றனுக்கிரகம்பண்ண அவ்வாறு சீடன்சர்வா த்மக சொரூபமாகிய பிரமசொரூபந் தானென்றறி ந்ததுவே சம்பவப்பிரமாணம். (பிரமாணமெட்டா நவிலும்)என்றது இவ்வாறு ஆத்மாவையறிதற்குப் பிரமாணங்கள் எட்டாக வேதங்கூறியது என்ற வாறு.

அஷ்டப்பிரமாணத்தின்

திஷ்டாந்த தாஷ்டாந்தஉரை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

சர்வஞ்சின்மயம்.